பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 06 2025 12 40
சனிக்கிழமை பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் பணிகளுக்கான நீர் பயன்பாட்டிற்கு வரி விதிக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

2. மொபைல் போன் ஏற்றுமதியில் முன்னணியில் விளங்கும் 10 நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது.

3. தமிழகத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கிராம சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. கனடாவுடனான வர்த்தக பேச்சுக்களை ரத்து செய்வதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** மற்றும் **Ayush Shetty** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

வேளாண் பணிகளுக்கான நீர் பயன்பாட்டிற்கு வரி விதிக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

நீர் நிர்வாக நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வேளாண் பணிகளுக்கு வரி விதிக்கப்படவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானதை அடுத்து மத்திய அரசு இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

வரி விதிக்கவுள்ளதாக வெளியான செய்திகள் அடிப்படை ஆதாரமற்றவை என்றும் தவறானவை என்றும் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் மற்றும் நீர் மாநில அரசின் பட்டியலில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள மத்திய அரசு இதற்கான வரி விதிப்பு மாநில அரசின் கட்டுப்பாட்டில் வருவதாக தெரிவித்துள்ளது.

இதுபோன்ற தவறான தகவல்களை ஊடகங்கள் வெளியிட வேண்டாம் என்றும், இது விவசாயிகளிடையே தேவையற்ற அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தும் என்றும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

>><><><<

கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து விவாதிப்பதற்காக மாநில அமைச்சர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்திற்கு மத்திய அரசு வரும் திங்கட்கிழமை அழைப்பு விடுத்துள்ளது.

கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இந்த கூட்டம் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாடுமுழுவதும் 2 லட்சம் பன்னோக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவது, மீன்வள கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துவது போன்றவை குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

>><><><<

உயிரி எரிவாயு முதற்கட்ட திட்டம் தொடர்பான திருத்தியமைக்கப்பட்ட நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மாற்று எரிசக்தி பயன்பாட்டுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கார்பன் எரிவாயு வெளியேற்றத்தை முழுமையாக குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை தொடங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்தல் நடைமுறை தற்போது எளிதாக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கான மானிய உதவியும், புதிய நெறிமுறைகளில் இடம்பெற்றுள்ளது.

>><><><<

மொபைல் ஏற்றுமதியில் முன்னணியில் விளங்கும் 10 நாடுகளின் பட்டியலில் தற்போது இந்தியா இடம்பெற்றுள்ளது.

கடந்த மே மாதம் மட்டும் மொபைல் போன் ஏற்றுமதி 74 சதவீதம் வளர்ச்சிக் கண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

தெலங்கானாவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு என நலவாரியம் ஒன்றை ஏற்படுத்த அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

ஹைதராபாத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் இதனைத் தெரிவித்த அம்மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு விவேக் வெங்கடசாமி இதற்கான வரைவு மசோதா இறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இது விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, சம்பந்தப்பட்ட துறை நிபுணர்களுடன் அமைச்சர் இதுகுறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

>><><><<

மேகாலயாவில் இளையோரை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு **Conrad K Sangma** கூறியுள்ளார்.

கோஹிமாவில் நடைபெற்ற மண்டல இளையோர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இளையோரை தொழில் முனைவோர் ஆக்குவதற்கான திட்டங்கள் மேகாலயா அரசின் தொலைநோக்கு ஆவணத்தில் இடம்பெற்றிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை இளையோர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு **Conrad K Sangma** கேட்டுக் கொண்டார்.

>><><><<

தமிழகத்தில் 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கிராம சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் நாட்டிற்கே வழிகாட்டும் வகையில், ஊரக வளர்ச்சித் துறை திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

261 கோடி ரூபாய் செலவில் சமத்துவபுரங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாத்மாகாந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின்கீழ் 77 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு பணி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

பீகார் உள்ளாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாட்டிலேயே முதன்முறையாக மின்னணு முறையில் வாக்களிக்கும் நடைமுறை இந்த தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி மின்னணு முறையில் வாக்கு செலுத்துவதற்கு பிற்பகல் ஒரு மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சியவர்கள் மாலை 5 மணிவரை வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>><><><<

மறைந்த முன்னாள் பிரதமர் நரசிம்மராவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் நாட்டின் வளர்ச்சியில் நரசிம்மராவ் ஆற்றிய பங்களிப்பு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

பஞ்சாபில் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் 25 அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில் ஊழல் முறைகேடுகள் மற்றும் போதைப் பொருள் புழக்கத்தை தடுக்க தவறியது போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

உத்தரப்பிரதேசத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர், 2 பேர் காயமடைந்தனர்.

ஆக்ரா – லக்னோ இடையேயான அதிவிரைவு சாலையில் தனியார் பேருந்தும், லாரியும் **Firozabad** அருகே நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>><><><<

கனடாவுடனான வர்த்தக பேச்சுக்களை ரத்து செய்வதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், கனடாவுக்கான புதிய வர்த்தக கட்டணங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

>><><><<

மலேசியாவில் ஐஎஸ் தீவிரவாத அமைப்போடு தொடர்புடையதாக கூறி பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**Johor** மற்றும் **Selangor** ஆகிய மாகாணங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

>><><><<

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கேரளா, மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், உத்ராகண்ட் ஆகிய மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஷ்கர் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளிலும் அடுத்த மாதம் 3 ஆம் தேதிவரை மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** மற்றும் **Ayush Shetty** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் தன்வி ஷர்மா 21-13, 21-16 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Karupathevin Letshanaa** -வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி 21-20, 21-9 என்ற செட்கணக்கில் சீன தாய்பேயின் **Kuo KI** -ஐ வென்றார்.

---------------

ஈட்டி எறிதலுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா முதலிடத்தை பிடித்தார்.

------------

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

டாஸ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – கொரியாவை வென்றது.

19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

------------

**Mallorca** டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி - அமெரிக்காவின் **Robert Galloway** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-1, 7-6 என்ற செட்கணக்கில் பிரான்சின் **Theo Arrivage -** அர்ஜென்டினாவின் **Guigo Andereozzi** இணையை வென்றது.

--------------

துருக்கி சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

மகளிர் 62 கிலோ எடைப்பிரிவில் மணிஷாவும் 57 கிலோ எடைப்பிரிவில் நெஹாவும் தங்கப் பதக்கம் வென்றனர்.

ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் **Suraj** வெண்கலப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 2-வது இடத்தில் உள்ளது.

-------------

உலகக்கோப்பை ஜூனியர் ரோல் பால் சாம்பியன் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா பட்டம் வென்றது.

நைரோபியில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு இறுதியாட்டங்களில் இந்தியா கென்யாவை வென்றது.

------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி நாட்டிங்காமில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>> <<